தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 – சித்திரை 21

2010 மே 4, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையிற் பீடுடைய தில்."

உரிய கடமையைச் செய்வதில் சோர்வு காணாமல் எவனொருவன் முயற்சிகளை விடாமல் மேற்கொள்கிறானோ அந்தப் பெருமைக்கு மேலாக வேறொரு பெருமை கிடையாது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

131—

நிதி உதவி

***59414—திரு. கு. ஹசன் அலி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதியில் நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 மே 4

இராமநாதபுரம் தொகுதியில், மண்டபம் வட்டாரத்தில், கீழக்கரை மண்டபம்-1, மண்டபம்-2 ஆகிய 3 நீர்வடி முகடு பகுதிகளில் ரூபாய் 4.88 இலட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூபாய் 25.30 இலட்சத்திலும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் நபார்டு வங்கியின் உதவியுடன், நீர்வடி மேம்பாடு திட்டப் பணிகள் 2006-2007, 2007-2008 மற்றும் 2008-2009 ஆகிய 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் தொகுதிக்கு உட்பட்ட மண்டபம், திருப்புல்லானி வட்டாரங்களில் 15,600 எக்டர் பரப்பில் ரூபாய் 9.30 கோடி மதிப்பீட்டில் நில மேம்பாடு, நீர்வள மேம்பாடு, தாவரவள மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் 2011-2012 ஆம் ஆண்டில் முடிவடையும். இதுமட்டுமின்றி, ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி வேளாண்மைத் திட்டத்தின்மூலம் 2012-2013 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் வட்டாரத்தில் 27 நீர்வடிப் பகுதிகளில் ஒரு எக்டருக்கு ரூபாய் 12,000 மதிப்பீட்டில் மத்திய அரசு, மாநில அரசு நிதி உதவியுடன் திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. நீர்வடி மேம்பாட்டுப் பணியின் ஒரு திட்டம் செயல்படுத்தும் பகுதியில் வேறு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தக் கூடாது என்பதால், நபார்டு வங்கியின் உதவியுடன் நீர்வடி மேம்பாட்டுத் திட்டம் இராமநாதபுரம் தொகுதியில் தற்போது செயல்படுத்தப்பட வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: உங்கள் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஒப்பற்ற தலைவி அன்னை சோனியா அவர்களைச் சந்தித்துவிட்டு மாண்புமிகு பிரதமர் அவர்களையும் சந்தித்துவிட்டு வந்திருக்கக்கூடிய கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் இராமநாதபுரத்திற்கு IAMWARM திட்டத்தின்கீழ் உடனடியாக மராமத்துப் பணிகளை இந்த ஆண்டிலேயே செய்ய வேண்டும் என்பதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரி அறிவிப்பு செய்தமைக்காக உங்களுடைய அனுமதியோடு முதற்கண் நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

2010 மே 4]

வறண்ட எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு கண்மாய் பெருகி அது வழிந்தோடி அந்த surplus water, அதற்குக் கீழே உள்ள கண்மாயில் தண்ணீர் உள்ள கண்மாய்க்குப் போய் சேருகிறது. இதைப்போல, கடற்கரை வரை சங்கிலித் தொடர்போல் கண்மாய்கள் அமைக்கப்பட்டு, பாசன வசதி அளிக்கப்படுகிறது. ஆனால், இந்த வடிநீர்க் கால்வாய்கள் surplus course-ஐ மராமத்து செய்ய பொதுப் பணித் துறையிடம் திட்டம் ஏதுமில்லை. மக்களே, நேரடியாக மராமத்துச் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அது இயலாத காரியம். அதுவும் கண்டிப்பாக இராமநாதபுரத்திலே அது இயலாத காரியம். இந்தக் கால்வாய்கள் தூர்ந்து போய் இருப்பதால், கண்மாய்க்குப் போக வேண்டிய தண்ணீர் வெளியில் சென்று வீணாகிறது. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வடிகால்களை சீரமைத்து, கிடைக்கும் தண்ணீர் அனைத்தையும் கண்மாய்க்கு அனுப்புவதன்மூலம், உணவு உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற வினா, இராமநாதபுரம் தொகுதியில் நபார்டு வங்கி உதவியுடன் நீர்வடி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த முடியுமா என்பது. அதற்குத்தான் நான் விளக்கத்தை அளித்திருக்கின்றேன். தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் மத்திய, மாநில அரசுகள் வகுத்துத் தந்திருக்கின்ற அந்தக் கொள்கை அடிப்படையிலேதான் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறைக்கு water shed, பல்வேறு துறைகளில் இருக்கின்றன. இதற்கெல்லாம் 10 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்து, அவை பயனில்லாமல் இருக்கின்றன. ஆகவே, நிரந்தரப் பணிகள் நடைபெற வேண்டுமென்று நீர்வடி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை ஒருங்கிணைத்து, அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. அதன்படி கண்மாய்களைத் தூர் எடுப்பது, நீர்வரத்து வாய்க்கால்களை செம்மைப்படுத்துவது போன்ற பணிகளை எடுக்கக்கூடிய அந்த வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளில் நீர்வடிப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றனவோ, அங்கே நீர் வீணாகச் செல்கிறது, அதை கண்மாய்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும், கண்மாய்களுக்குச் செல்லும் வாய்க்கால்களை ஒழுங்காக அமைத்துத் தரவேண்டுமென்று கோரிக்கையாக எழுதித் தருவார்களேயானால், இந்தத் துறையில் செய்யக்கூடியவற்றைச் செய்யவும், பொதுப் பணித் துறையிலே செய்யக்கூடியவற்றை மாண்புமிகு நம்முடைய அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கவும் நான் முயற்சி எடுப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

திரு. கு. ஹசன் அலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய யோசனைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் எழுதித் தருவதைவிட, இதைப்பற்றி அறிய ஒரு குழு எங்களுடைய அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அமைப்பார்களேயானால், இதைப் பற்றிய விவரங்களும், அங்கிருக்கிற ஆக்கிரமிப்புகளும், இதை எந்த வகையிலே சரிப்படுத்த முடியும் என்பதையும் ஆராயலாம். நான் ஏற்கெனவே ஒருமுறை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். மறுபடியும் இதைப் பரிசீலனை செய்து, ஒரு குழு அமைத்து இதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கு கேட்டிருக்கின்ற அந்தக் கேள்விக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி, அப்படி ஒரு குழு அமைப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதினால், உடனடியாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.